Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages பக்கம் 1

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 17 Click - 5

AUGUST 2021 ₹ 1

# ட்ரோன் 2021 புதிய விதிமுறைகள்..!

இந்தியாவில் தற்போது ட்ரோன்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. பல்வேறு தொழில்துறையை சேர்ந்தவர்கள் அவர்களின் தேவைக்கு ஏற்ப ட்ரோன்களில் மாற்றங்கள் செய்து அதை பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக, புகைப்படம் எடுத்தல் ,மேப்பிங், விவசாயம், தளவாடங்கள் ,சுகாதார அமைப்பு ,சொத்து பராமரிப்பு, போன்ற பரந்த அளவிலான பயன்பாடுகளுக்கு ட்ரோன்கள் மிகப்பெரிய ஆற்றல் பெற்றுள்ளது. ட்ரோன்களின் தொழில்நுட்பம், உலகெங்கிலும் ,அடுத்த தொழில் புரட்சியை நோக்கி வேகமாக முன்னேற்றம் கண்டுவருகிறது. குறிப்பாக இந்தியாவில் திருமண ஒளிப்பதிவில் மிகப்பெரிய நாகரீக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனாலும் ட்ரோன்களை பயன்படுத்தவும், அதனை இறக்குமதி செய்யவும் ,கடுமையான கட்டுப்பாடுகள் இதுவரை இருந்து வருகின்றன. ட்ரோன்கள் மீதான கட்டுப்பாடுகளுக்கு தளர்வுகள் கோரி பல்வேறு தரப்பிலிருந்தும் அரசுக்கு வேண்டுகோள் விடப்பட்டன.

இந்நிலையில்தான், கடந்த ஜூன் மாதம் 27ஆம் தேதியன்று, ஜம்முவில் உள்ள இந்திய விமானப்படைத் தளத்தை எதிரி நாட்டு ட்ரோன்கள் ட்ரோன்கள் தாக்குதல் நடத்தின. இதற்கு இந்தியா தக்க பதிலடி கொடுத்தாலும், தேசிய பாதுகாப்புக்கு ட்ரோன்களால் அச்சுறுத்தல் இருப்பதால், ட்ரோன்களுக்கு முழுமையான தடை விதிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் சமீபத்தில் வெளியிடப்பட்ட சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் (எம் சி ஏ) ட்ரோன்களுக்கான புதிய வரைவு விதிகளை (2021) வெளியிட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. ட்ரோன்களின் பயன்பாடு வரும் காலங்களிலும் எல்லா துறையினரும் பயன்படுத்தும் படியே இருக்கும் . எனவே, இந்தியாவில் ட்ரோன் துறையை தாராளமயமாக்குவதையே அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதையே, ட்ரோன்களின் புதிய வரைவு( 2021 )விதிகள் நமக்குச் சொல்கின்றன. ஒட்டுமொத்தமாக ட்ரோன்களுக்கான புதிய விதிகள் யாவும் தொழில் செய்பவர்களுக்கு புது நம்பிக்கை ஏற்படுத்தியுள்ளது,

### ட்ரோன் வரைவு விதிகள் முக்கிய அம்சங்கள்

### டிஜிட்டல் ஸ்கை இயங்குதளம்

அனைத்து டிஜிட்டல் செயல் முறைகளுக்கும் இணங்க , இந்த ஆன்லைன் தளம் இந்தியாவில் ட்ரோன் செயல்பாடுகளை நிர்வகிப்பது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகளுக்கு சிவில் விமான போக்குவரத்து இயக்குனரகம் வழங்கும். இது வணிக நட்பு ஒற்றை சாளர ஆன்லைன் அமைப்பாக உருவாக்கப்படும்.

### ஒப்புதல்கள்

ட்ரோன்களை பயன்படுத்த , அனுமதி பெற , தாக்கல் செய்ய வேண்டிய படிவங்களில் எண்ணிக்கை 25 லிருந்து ஆறாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான கட்டணங்களும் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளன.

அங்கீகாரம் இல்லாத ட்ரோன்களை தடுக்கவும், பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், இனி டிஜிட்டல் அனுமதி இல்லாமல் வெறுமனே எந்த ஒரு ட்ரோனும் பறக்கவோ, அல்லது புறப்படவோ முடியாது. ஆளில்லா போக்குவரத்து மேலாண்மை அமைப்பு ட்ரோன்கள் வான்வெளியில் பறப்பதற்கு ஒரு கட்டுப்பாட்டு அமைப்பாக செயல்படுகிறது. மேலும் ட்ரோன்கள் அங்கீகரிக்கப்பட்ட விமான பாதையில் பறப்பதை உறுதி செய்வதற்காக பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் விமான போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்களுடன்(ஏடிசி) நெருக்கமாக ஒருங்கிணைக்கிறது.

### வான்வெளி வரைபடம்

வான்வெளி வரைபடம் , வான்வெளியை

பசுமை, மஞ்சள், மற்றும் சிகப்பு ஆகிய மண்டலங்களாக பிரிக்கிறது.

### சிகப்பு மண்டலம்

வரையறுக்கப்பட்ட பரிமாணங்களில் வான்வெளி, இந்தியாவின் நிலப்பரப்புகள் அல்லது பிராந்திய நீர் நிலைகளுக்கு மேலே, அல்லது இந்தியாவின் பிராந்திய நீர்நிலைகளுக்கு அப்பால் மத்திய அரசு குறிப்பிட்ட எந்த நிறுவல் அல்லது அறிவிக்கப்பட்ட துறைமுக வரம்புகள், அத்தகையவை சிகப்பு மண்டலங்களில் ட்ரோன் செயல்பாடுகள் விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே அனுமதிக்கப்படும்.

### மஞ்சள் மண்டலம்

இந்தியாவின் நிலப்பரப்புகள் அல்லது பிராந்திய நீர்நிலைகளுக்கு மேலே வரையறுக்கப்பட்ட பரிமாணங்களின் கட்டுப்படுத்தப்பட்ட வான்வெளியில் ட்ரோன் செயல்பாடுகள் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் சம்பந்தப்பட்டுள்ள விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு ஆணையத்தின் அனுமதி தேவை. இது விமான நிலையம் சுற்றளவில் இருந்து 45 கிமீ முதல் 12 கிமீ வரை குறைக்கப்பட்டுள்ளது.

### பைலட் லைசன்ஸ்

மைக்ரோ மற்றும் நானோ ட்ரோன்களுக்கு, வணிகரீதியான பயன்பாடு மற்றும் ஆர் அன் டி நிறுவனங்களுக்கு பைலட் உரிமம் தேவையில்லை.

### விமான தகுதி சான்றிதழ்

மொத்த எடை 500 கிலோ வரை ட்ரோன் களுக்கு அத்தகைய சான்றிதழ்களை வழங்குவது இந்திய தர கவுன்சில் மற்றும் அதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் நிறுவனங்களின் பொறுப்பாகும்.

ஒவ்வொரு ட்ரோனுக்கும் தனித்துவமான அடையாள எண்ணை சுய சான்றிதழ் பாதை மூலம் டிஜிட்டல் வான மேடையில் உற்பத்தியாளர் உருவாக்க முடியும். ட்ரோன்களை மாற்றுவதற்கும் பதிவு நீக்குவதற்கும் இந்த தளம் எளிதாக்குகிறது.

இந்த விதிகளை மீறிய அல்லது தவறிய நபர்கள் விமான சட்டம் 1934 இன் விதிகளின்படி நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட வேண்டும்.

# சினிமா கேமராக்களுக்கு இணையாக மிரர்லஸ் கேமராக்கள்!..

புகைப்படக் கலைஞர்களிடம் ஏற்படும் கலை ஆர்வமும், கற்பனை வளமும் ஒவ்வொரு கலைஞனுக்கும், வெவ்வேறு விதமாக மாறுபடுகிறது. இது ஒவ்வொரு துறையிலும் அந்தந்த காலகட்டத்திற்கு ஏற்றார் போல் வேறுபட்டு காணப்படும். இருந்தாலும் அவர்களின் தனித்திறமை இங்கே முக்கியமாக பார்க்கப்படுகிறது. அதுவே பல கலைஞர்களுக்கு புகழைத் தேடித் தருகிறது .சில கலைஞர்களுக்கு வருமானம் ஈட்டித் தருகிறது .படிப்படியாக மாறிவரும் ஒளிப்பட தொழில்நுட்பமானது இந்த கலையை ஒரு உயர்ந்த இடத்தில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. எனவேதான், விண்ணுக்கும், மண்ணுக்கும் அதன் பயணம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மக்கள் அனைவரும் புகைப்படக் கலையை ஒரு பொழுதுபோக்கு அம்சமாகவே பார்க்கின்றனர். அதனால்தான் சமூக வலைதளங்களில், கோடிக்கணக்கான செல்பி புகைப்படங்கள் குவிந்து கிடப்பதை நாம் அன்றாடம் பார்க்கிறோம். ஆனால் இக்கலை மீது ஈடுபாடுகொண்டு அதையே தொழிலாக ஏற்றுக் கொண்ட பல புகைப்பட கலைஞர்கள், அந்தந்த காலத்திற்கேற்ப புகைப்படம் எடுக்கும் முறையில் பல்வேறு விதமான புதுமைகளை புகுத்தி, புகைப்படத் துறையில் தலைசிறந்து விளங்கி வருவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். இதில் குறிப்பாக திருமணப் புகைப்படக்கலை, என்பது, மக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டு, உலக அளவில் மக்களிடம் ஏற்படும் நாகரீக மாற்றத்திற்கு முக்கிய காரணமாக விளங்குகிறது.

எஸ்எல்ஆர், எனப்படும் பிலிம் கேமராவிற்கு பின் வெளிவந்த டி எஸ்எல்ஆர் எனும் பிலிம் இல்லாத டிஜிட்டல் கேமராக்களுக்கு, மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இப்போதும் கூட இருந்து வருகிறது .இன்றும் இந்த கேமராக்களை பயன்படுத்துவோர் கணிசமான அளவில் எண்ணிக்கை உள்ளது.

ஆனாலும், இன்றைய இளம் தலைமுறையினரிடம் ஏற்படப்பட்டுள்ள சமூக ஊடகங்கள் மீதான ஆர்வம், மற்றும் புகைப்படங்களுடன் கூடிய கருத்துப் பரிமாற்றம் போன்றவை அதிகரித்து காணப்படுகிறது. எனவே கேமரா தயாரிப்பு நிறுவனங்களும் கேமரா ஆய்வாளர்களும் இவ்விஷயத்தில் தனி கவனம் செலுத்தி சில காலங்களுக்கு முன்பாகவே ஒளிப்பட தொழில்நுட்பத்தை, தொலைத்தொடர்பு மற்றும் சமூக ஊடகங்களில் கம்பியில்லா தொழில்நுட்பம் வழியாக மின்னணு முறையில் கேமராவை செயல்பட வைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். இதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர்.

இதன் ஒரு பகுதியாக 1930 ஆம் ஆண்டின் நடுப் பகுதிகளிலிருந்து, எல்லா வகையான கேமராக்களிலும் , பழக்கத்தில் இருந்து வந்த பெண்ட்டாப்பிரிசம் அல்லது பெண்டா மிரர் எனப்படும் கண்ணாடி பாக பகுதியை நீக்க முடிவு செய்தனர் . அதுவே கேமராவின் உள்பகுதியில், பெரும்பகுதியை ஆக்கிரமிப்பு செய்திருந்தது. அந்த கண்ணாடி பாகத்தை ( மிரர்லஸ்) நீக்கி விட்டு அங்கு

சென்சாரை பொருத்தினால் கேமரா தொழில்நுட்பத்தில் நவீன மாற்றங்களை உருவாக்க முடியும் என்று முழுமையாக நம்பினார்கள். இதனால் மிரர்லஸ் கேமரா தொழில்நுட்பம் உருவானது. இதன்படி செய்ததால் கேமராவின் வடிவம் சிறியதானது. எடைகனம் குறைந்தது. கேமராவிற்கு தேவையான மின்னணு மாற்றங்கள் செய்ய போதுமான இடம் கிடைத்தது. இது தவிர ஏற்கனவே ஷட்டரில் ஏற்பட்டு வந்த துல்லியமான அதிர்வுகளை கூட அறவே நீக்க முடிந்தது. ஆப்டிகல் வியூ பைண்டருக்கு பதிலாக அந்த இடத்தில், மின்னணு வியூ பைண்டர் மற்றும் எல்சிடி டிஸ்ப்ளே ஆகியவை மாற்றம் செய்யப்பட்டன. மேலும் அதிவேகமாக செயல்படும், பிராசஸர்கள் கேமராவுக்கு கூடுதல் பலம் பெற்று தந்தன. இதன்படி இப்போது வரும் கேமராக்களில் ஒரு நொடிக்கு 30 படங்கள் என எடுக்கும் அளவிற்கு தரம் உயர்ந்துள்ளது. இது தவிர ரா ஃபைலில் கண்டினியூவ் ஷார்ட்ஸ் எனும் வகையிலும் முன்னேறி இருக்கிறோம் . பிட்ரேட் கூடிக்கொண்டே போகிறது .இது தவிர கேமராவில் நொடிப் பொழுதில் ஆகும், ஆட்டோ போக்கஸ் வேகம் கூடியிருக்கிறது. குறிப்பாக ஐ.ஆட்டோ ஃபோகஸ், ஃபேஸ்டிராக் கிங் மற்றும் டிடக்ஷன், அனிமல் ஆட்டோ ஃபோக்கஸ் என ஃபோக்கஸ்ஸில் பல்வேறு பிரிவுகள் வந்த வண்ணம் உள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக , 4கே,8கே, வீடியோ தரத்தை இந்த மிரர்லஸ் கேமரா மூலமாக தரம் குறையாமல் எடுக்கும் அளவிற்கு இதன் தொழில் நுட்பம் உயர்ந்து வருகிறது. எல்லா வசதிகளும் மிரர்லஸ் கேமராவில் ஒன்றாக கொண்டு வந்தபின் , மிரர்லஸ் தொழில்நுட்பம் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிப்போனது.

2004-2008 ஆம் ஆண்டுகளில் எப்சன் மற்றும் லைக்கா நிறுவனங்கள், மிரர்லஸ் கேமராக்களின் தயாரிப்பை தொடங்கி வைத்தன. இந்த நிறுவனங்களை தொடர்ந்து சோனி- சிக்மா போன்ற நிறுவனங்கள் ஏபிஎஸ்சி, அளவிலான சென்சாரை பயன்படுத்தி, மிரர்லஸ் கேமராவின் மாற்றத்திற்கு வெவ்வேறு முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டனர். ஆனாலும் 2008ஆம் ஆண்டு , உலகின் வணிக ரீதியான முதல் மிரர்லஸ் கேமராவை , மைக்ரோ ஃபோர் தேர்டின் ஆதரவுடன் பேனாசோனிக் லுமிக்ஸ் சார்பாக வெளியிட்டனர். அதனைத் தொடர்ந்து ஒலிம்பஸ், சாம்சங், பெண்டாக்ஸ் ,நிக்கான், பியூஜி பிலிம், போன்ற நிறுவனங்கள் மிரர் லஸ் கேமராவை தயாரிக்க களத்தில் இறங்கினர். 2012ஆம் ஆண்டு ஆர் எக்ஸ் 1 ஆர் எனும் சிறிய ரக சீரிஸ் மிரர்லஸ் கேமராவை ஏ பிஎஸ்சி சென்சார் எம் 43 யுடன் இணைந்து அனைவரும் வியக்கும்படி தயாரித்து வெளியிட்டது . 2013 ஆம் ஆண்டு சோனி ஏ. 7 மற்றும் ஏ. 7ஆர் ஆகிய ஃபுல் பிரேம் மிரர்லஸ் கேமராவை வெளியிட்டனர். இதற்கு தேவையான லென்ஸ்களை கழற்றி மாற்றி அமைக்கும்படி அறிமுகப்படுத்தியபோது ஒளிப்பட உலகமே, சோனியின் கேமரா தயாரிப்புகளை உற்று நோக்கி பார்க்க ஆரம்பித்தது. அதேசமயம் கேனான் மற்றும் நிக்கான் நிறுவனங்கள் ஃபுல் ஃபிரேம் இன்டர் சேஞ்சிபிள் லென்ஸ் அமைப்பு கொண்ட கேமராவை கிட்டத்தட்ட 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் அறிமுகம் செய்தது. ஆனாலும் கேனான் நிறுவனம், இதில் ஒரு ரகசியத்தை காத்து கடைசியாக களத்தில் இறங்கியது.

2014ஆம் ஆண்டுக்கு பிறகு மிரர்லஸ் கேமராக்கள் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. அதேசமயம் மிரர்லஸ் கேமராக்களின் எதிர்காலம் மிகப் பிரகாசமாக தெரிந்தது. இதன் காரணமாக ஏனைய பிராண்ட் டிஎஸ்எல்ஆர் கேமராக்களை பயன்படுத்தி வந்த பயனாளர்கள் மிரர்லஸ் கேமரா தொழில்நுட்பத்தின் மீது ஆர்வம் காட்டத் தொடங்கினார்கள். ஆனாலும் டிஎஸ்எல்ஆர் மீது நம்பிக்கை வைத்திருந்தவர்கள் அதையே இன்றும் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர் . சென்சாரை பற்றி கவலைப்படாத ஒரு சில ஒளிப்படக் கலைஞர்கள் அப்போது வெளியாகியிருந்த கிராப் சென்சார் மிரர்லஸ் கேமராவை வாங்கினார்கள் . ஃபுல் ஃபிரேம் சென்சார் குறித்து தெரிந்தவர்கள் சோனி மிரர்லஸ் கேமராவை வாங்கத் தொடங்கினார்கள் .

சோனியின் ஆராய்ச்சி மற்றும் தயாரிப்பு குழுக்கள் மிக வேகமாக செயல்பட்டனர். இந்த கொரோனா காலத்திலும் அது தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் ஏனைய பிராண்டு நிறுவனங்கள்,மிரர்லஸ் கேமராக்கள் தயாரிப்பை, பின்பற்றுவதற்கு ஏற்ப முன்னுதாரணமாக சோனியின் தயாரிப்புகள் இருக்கும். அதேசமயம் ஏனைய கேமரா தயாரிப்பு நிறுவனங்கள் போட்டியிடத் தயாராகும் போது ,சோனி நிறுவனம் அதனுடைய புதிய மாடல் கேமராவை அறிமுகப்படுத்தி அனைவரையும் அசத்திக் காட்டி வருகிறது. சோனியிடம் அதன் பயனாளர்கள் எதுவும் கேட்காமலேயே, அவர்களின் தேவையை உணர்ந்து ,அடுத்து அறிமுகமாகும் மிரர்லஸ் கேமராவில் அவர்கள் எதிர்பார்க்காத பல சிறப்பு அம்சங்களை, சோனி நிறுவனம் அள்ளிக் கொடுத்து வருகிறது. வணிகரீதியாக தற்போது வரை சோனி மற்றும் கேனான் நிறுவனங்களே முன்னிலையில் உள்ளன.

இதில் இன்னொரு முக்கியமான விஷயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மிரர்லஸ் கேமரா என்பது சினிமா தயாரிப்புகளுக்கு ஏற்ற தொழில்நுட்ப வசதிகளுடன் இனிவரும் காலங்களில் 100% மாற்றம் பெறும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது. கேமரா மற்றும் வீடியோ இவ்விரண்டு தொழில்நுட்பமும் ஒரே கேமராவில் அடங்கி விடுவதால் கேமரா தயாரிப்பு நிறுவனங்களுக்கு பொருளாதார இழப்பு ஏற்படாது. நேரம் மிச்சம். தயாரிப்பு செலவு குறைவு. இன்றைய தலைமுறையினருக்கு அதிவேகமாக இயங்கும் மிரர்லஸ் கேமரா ஊக்கத்தை ஏற்படுத்தும். இனி வரும் காலங்களில் மிரர்லஸ் கேமராக்களின் தாக்கம் அதிகரித்து காணப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை

# முக்கிய அறிவிப்பு

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களே, வணக்கம்.

கொரோனா வழிமுறைகளை பின்பற்றி நீண்டகாலமாக நடைபெறாமல் இருந்த நமது சங்க செயற்குழுக்கூட்டம் 26 .7 .2021. அன்று சென்னை, அண்ணா சாலை ,எஸ்.வி.எஸ் கிளப்பில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு சங்கத் தலைவர் சரவணன் தலைமை ஏற்று நடத்திக் கொடுத்தார். இன்றைய நிலையை கருத்தில் கொண்டு, நமது செயற்குழு உறுப்பினர்கள் பல்வேறு ஆலோசனைகளை சங்க முன்னேற்றத்திற்காக முன் மொழிந்தார்கள். அதனடிப்படையில் சில முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விரைவில் புதிய விலைப்பட்டியல் தயாரித்து வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது. இந்த விலைப் பட்டியலில் சங்கத்தின் ஆலோசனைப்படி அதிகபட்சவிலை நிர்ணயிக்கப்படுகிறது. அதேசமயம் அந்தந்த பகுதியில் நிலைமைக்கு ஏற்ப நமது சங்க செயற்குழு உறுப்பினர்களின் தலைமையில் , அந்த பகுதியில் உள்ள போட்டோ ஸ்டுடியோ உரிமையாளர்கள் இணைந்து தங்கள் பகுதிக்கு ஏற்றவாறு விலைப்பட்டியலை நிர்ணயித்துக் கொள்ளவும் ஒப்புதல் வழங்கப்பட்டது. சங்கத்தின் சார்பாக அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும் விலைப்பட்டியல் வாட்ஸ்அப் மூலம் மட்டுமே அனுப்பப்படும். இதை ஸ்டுடியோ உரிமையாளர்கள் பிரிண்ட் அவுட் எடுத்து பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நமது சங்கத்தின் தேர்தல் மற்றும் பொதுக்குழு ஆகியவை 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசாங்கத்தின் வழிமுறைகளை பின்பற்றி நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

புதிய உறுப்பினர் சேர்க்கை வரும் டிசம்பர் மாதம் வரை நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ரினிவல் விடுபட்ட உறுப்பினர்கள் கூட தங்கள் அடையாள அட்டையை டிசம்பர் மாதம்வரை ரெனிவல் செய்து கொள்ளலாம். மேலும் தொடர்ந்து ரெனிவல் உள்ள உறுப்பினர்கள் வழக்கம்போல் மார்ச் மாதம் வரை ரினிவல் செய்து கொள்ளலாம்.

நீண்டகாலமாக ரினிவல் செய்யாமல் தங்கள் அடையாள அட்டையின் எண்களை தவற விட்டவர்கள், 250 ரூபாய் செலுத்தி அதே எண்களை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம். ஆனாலும் பழைய சீனியாரிட்டி அடிப்படையில் அவர்களுக்கு கிடைக்கும் சலுகைகள் வழங்கப்படமாட்டாது .புதிய முறைப்படி வழங்கப்படும்.

நமது சங்கத்தில் உறுப்பினராக இருந்து உயிர் நீத்தவர்களின் அடையாள அட்டை( ஐ டி எண்) எண்களை அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது. இதற்கு சங்கம் சார்பாக கூறப்பட்டுள்ள கட்டணத்தை அவர்கள் செலுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

எனவே சங்கம் சார்பாக அறிவிக்கப்பட்டுள்ள இவைகளை முறையாக பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

செயலாளர்
**க.துரைபாபு**

CVPA NEWS (Tamil & English ) Monthly Newspaper,
RNI No. 15261 /2005 (R.Dis no.1834/04)
Published by B.SRIDAR, on behalf of
Chennai Video & Photographers' Association,
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2.
Ph: 2860 7821 Email : cvpanews2019@gmail.com,
Website : www.cvpa.in
Printed by M.NAVANEETHAN, at Nava Jothi Achagam,
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : B.SRIDAR, Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821

Postal Registration no TN/ARD/11/2021-2023
WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.08.2021

To,